# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.249/2022

**14.09.2023 - வா.சா. 1 ராணி சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் பெயர் முனுசாமி பிள்ளை. என் தாயார் பெயர் பச்சையம்மாள். என் பெற்றோருக்கு 4 ஆண்கள் செல்வதுரை, பழனி, ராமமூர்த்தி மற்றும் ஆறுமுகம் மற்றும் 2 பெண்கள் நான் மற்றும் என் அக்காள் ராஜம். பிரதிவாதி என்னுடைய அண்ணன் செல்வதுரையின் மகன். தாவா சொத்துக்கள் எந்த சர்வே எண்களில் அமைந்துள்ளது என்றும், மற்றும் அதன் ஐக்குபந்தியும் தெரியாது. செல்வதுரைக்கு கோவிந்தம்மாள் என்ற மனைவி இருந்தார். அவர்கள் மூலம் கிருஷ்ணமூர்த்தி, உமா, பூவேந்தன்(பிரதிவாதி), கோதண்டராமன், மேகநாதன் ஆகியோர்கள் பிறந்தார்கள்.

தாவா சொத்துக்கள் என் அண்ணன் செல்வதுரை தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். அச்சொத்துக்களை என் சகோதரர் 1998ல் கிரையம் பெற்றார். எத்தனை அயிட்ட சொத்து மற்றும் எத்தனை கிரையப் பத்திரங்கள் மூலம் கிரையம் பெற்றார் என்றால் ஒரு கிரையப் பத்திரத்தின் முன்னிலையில் தான் கிரையம் பெற்றார். எவ்வளவு சொத்துக்கள் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. என் சகோதரர் செல்வதுரை 2017ல் இறந்து விட்டார். அவர் உயிருடன் இருக்கும்போதே சொத்தை கிரையம் பெற்று வீடு கட்டி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

1990ல் தரைத்தளத்தில் 3 போர்ஷன் கட்டி தன் மகன்களுக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வீடு இரண்டு டி.எஸ். நெம்பருக்கு உட்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வீடனாது டிஎஸ். 45 மற்றும் டி.எஸ். 46/1ல் அமைந்துள்ளது. அந்த போர்ஷன்கள் கிழக்கு மேற்கு வாக்கில் அமைந்துள்ளது. மேற்சொன்ன போர்ஷனில் வடக்கு புறம் கிருஷ்ணமூர்த்தி, அதற்கு தெற்கே உள்ளதை பிரதிவாதிக்கும், அதற்கு அடுத்து தெற்கில் உள்ள கோதண்டராமனுக்கு வாய் மொழி பாகமாக கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரிதான்.

அந்த தேதியில் இருந்தே அவருடைய பிள்ளைகள் அந்த போர்ஷனை அனுபவித்து வந்து தன் தகப்பனார் பெயரில் வீட்டு வரி மற்றும் அனைத்து

வரிகளையும் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி அவருக்கு ஒதுக்கிய இடத்தில் 2016ல் இரண்டு அடுக்குமாடி கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதி அவருடைய போர்ஷனில் 2017ல் இரண்டு அடுக்கு மாடி கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. தற்போது பிரதிவாதியின் போர்ஷனில் இரண்டு அடுக்கு மாடி உள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. வழக்கு போட்ட பிறகு கட்டியிருக்கலாம். நீதித்துறை நடுவர் எண்.1, திருவண்ணாமலையில் ஒரு வழக்கு நடந்தது. தாவா சொத்து சம்மந்தமாக தான் அடிதடி வழக்கு ஏற்பட்டது. நான் தனி புகார் கொடுத்த வழக்கு மேல்நடத்தவில்லை. அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்தோம். (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- ராணி

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.